110—

உணவுக் கடத்தல் தடுப்புகாவல் துறையை ஏற்படுத்துதல்.

*1462 திரு. வ. மு. சுப்பிரமணியம்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உணவுப் பொருட்களை பதுக்குவதால் விலையேற்றம் ஏற்படுவதைத் தடுக்க உணவுக் கடத்தல் தடுப்புக் காவல் துறையை F oo Cell) மீண்டும் நியமிக்க அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் ஏற்கனவே உணவுக் கடத்தலைத் தடுக்க குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை (Civil Supplies C.I.D.) செயல்பட்டு வருகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செயல்பட்டு வந்த இந்தத் துறை எப்போது கலைக்கப்பட்டது என்கிற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை கலைக்கப்படவில்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தடுப்புக் காவல் துறை மாவட்ட அளவில், எந்தெந்த தகுதி நிலையில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 30]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும், ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பது குறித்த விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தேனி பன்னீர்செல்வம்.

திரு. தேனி. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு கடத்தல் தடுப்புப் பிரிவு என்பது தற்போது அமலில் இருந்தாலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான அளவில் அந்த அதிகாரிகளுடைய எண்ணிக்கை இல்லை. மாவட்டத்திலே ஒரு உணவு தடுப்புக் காவல் துறை கண்காணிப்பாளரும், துணை கண்காணிப்பாளரும், ஒரு ஆய்வாளரும், ஒரு துணை சார்பு ஆய்வாளரும் மட்டுந்தான் இருக்கிறார்கள். அதுவும் ஒரே டமாக ஒரே இடத்திலே, மாவட்டத்தினுடைய தலைமையிடத்தில் மட்டுந்தான் இருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரிவுக்கு கூடுதலாக அதிகாரிகளை நியமித்து இரண்டு மூன்று பிரிவுகளாக அவர்களுக்கு தலைமையிடங்களை அமைத்து, குறிப்பாக, மாவட்டத்தினுடைய எல்லையோரங்களில் இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் நம்முடைய மாநில எல்லையோரங்களில் அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில எல்லையோரங்களில் இந்தப் படை நன்றாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. மாவட்ட எல்லையோரங்களிலேயிருந்து இந்த பிரிவுகள், இன்றைக்கு மாநில எல்லையோரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குழுவும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவைகளிலே உறுப்பினர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பது குறித்து குறிப்பு இல்லையே தவிர இதிலே மாவட்டத்திற்கு ஒரு குழு வீதம் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

[1991 செப்டம்பர் 30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு தடுப்புக் காவல் துறையினர் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், கலைக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கலைக்கப்படவில்லை என்று சொன்னாலும் அவர்களுக்கு முன்பிருந்த அதிகாரம் பறிக்கப்பட்டு வெறும் தடுப்புக்காவல் துறையைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஒரு பிரிவினை எடுத்து ரெவின்யூ அதிகாரிகளிடம் கொடுத்ததன் காரணமாக அவர்கள் எபெக்டிவ்வாக செயல்படவில்லை. அதாவது அவர்களிடம் சில கருவிகள் இல்லை. கேரளத்திற்கு கடத்துகிறார்கள் என்று சொன்னால் ரெவின்யூ அதிகாரிகளால் அதைத் தடுக்க முடியவில்லை. போலீஸ் அதிகாரிகளிடம் மைக் போன்ற கருவிகள் இருக்கின்ற காரணத்தினால் உடனடியாக அவர்களைத் தொடர்ந்து சென்று பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, முன்பிருந்த அதிகாரத்தை அந்தத் துறைக்கு வழங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களைப் பொறுத்த வரையில் நம்மால் ரேஷன் கடைகள் மூலம் கொடுக்கப்படுகின்ற உணவுப் பொருள்களினுடைய நடமாட்டத்தை இந்தக் குழு மிகச் சிறப்பாக இன்றைக்கு கண்காணித்துக் கொண்டு வருகிறது. சில்லரை விற்பனைக் கடைகளுக்கு எடுத்துச் செல்கின்றபோது நடைபெறுகிற சில திருட்டு, கொட்டுதல், கலப்படம் முதலியவற்றையும் இந்தக் குழு கண்காணித்துக் கொண்டு வருகிறது. அதிக அதிகாரங்கள் ஒரு காலத்திலே இருந்தது உண்மைதான். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுகள்படி சில வரையறைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு தற்போது அவர்கள், சில திருட்டு, கொட்டுதல், கலப்படம் நடமாட்டம் ஆகியவைகளை கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள்.

1991 செப்டம்பர் 30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனி சாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உணவுப் பொருட்கள் பதுக்கலை தடுப்பது சம்பந்தமாக இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்ற குழுவால் இது வரையில் எத்தனை கேஸ்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக எவ்வளவு பொருட்கள் தடுக்கப்பட்டு அரசு மூலமாக கைப்பற்றப்பட்டிருக்கிறது என்கிற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலே அப்படி நடை பெற்ற குற்றங்கள் கண்காணிக்கப்பட்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விவரங்களைத் தருகிறேன்.

முற்பகல் 10.00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 111 ; திரு. எஸ். எஸ். ராமசுப்பு; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

111—

போக்குவரத்துக்கழகப் பணிமனைகள்.

* 1193 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகப் பணிமனை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விரைவாகச் செயல்படுத்தப்படுமா ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY